45

RPAD

உறுப்பினர் செயலர், புதுக்கோட்டை கூட்டு உள்ளூர் திட்டக் குழுமம் / நகர் ஊரமைப்பு மண்டல துணை இயக்குநர் சிவகங்கை அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை: திருமதி.க.பாண்டீஸ்வரி, AMIE., MBA.,

ந.க.எண்:2690/2019/சிம-3 2865 நாள்:29.11.2019

பொருள்: நகர் ஊரமைப்பு - கட்டிடம் - சிவகங்கை மண்டலம் - புதுக்கோட்டை உள்ளூர் திட்டக் குழுமம்/புதுக்கோட்டை மாவட்டம்/வட்டம் 9A நத்தம்பண்ணை கிராமம் - நிலஅளவை எண்:95/6pt-இல் 15003.61 ச.மீ பரப்பளவு இடத்தில் தரைதளம் + 2 தளங்கள் கொண்ட 192 குடியிருப்பு கட்டிடங்கள் கட்டுமானத்திற்கு கட்டிட அனுமதி வழங்க - தொழில்நுட்ப இசைவு அளித்தல் - தொடர்பாக.

பார்வை:
1) செயற்பொறியாளர், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் அவர்கள் கடிதம் ந.க.எண்:887/JE/P/2017 நாள்:19.07.2019
2) புதுக்கோட்டை(01) மண்டல துணை வட்டாட்சியர் அவர்களின் செயல்முறைகள் கடிதம் டி.ஆர்/218/0103/22/048500TR நாள்:05.07.2018.
3) புதுக்கோட்டை உள்ளூர் திட்டக் குழுமம் தீர்மான எண்.2 நாள்:28.08.2019.
4) இவ்வலுவலக கடிதம் இதே எண் நாள்:15.11.2019.
5) நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்:26294/2010/எல்ஏ2 நாள்:20.12.2010.
6) நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்கள் கடிதம் ந.க.எண்:23152/2011/ நாள்:11.11.2011.
7) அரசாணை நிலை எண்:86 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள்:28.03.2012.
8) நன்னிலை வரி கட்டணம், மனுதாரர் செலுத்தி இவ்வலுவலகத்தில் சமர்ப்பித்த நாள்:28.11.2019.

******

உத்தரவு:-

புதுக்கோட்டை உள்ளூர் திட்டக் குழுமம்/புதுக்கோட்டை மாவட்டம்/வட்டம், 9A நத்தம்பண்ணை கிராமம், நிலஅளவை எண்:95/6pt-இல் 15003.61 ச.மீ பரப்பளவு இடத்தில் தரைதளம் + 2 தளங்கள் கொண்ட 192 குடியிருப்பு கட்டுமானங்கள் கொண்ட வரைடத்திற்கு ஒப்புதல் இசைவு அளிக்கப்படுகிறது.

| தளவிபரம் | பரப்பளவு விபரம் |
|---|---|
| நிலையிலுள்ள கோவில் தரைத்தளம் | 30.91சமீ |
| தரைதளம் (Type-A+B) | 2371.52சமீ |
| முதல் தளம் (Type-A+B) | 2371.52சமீ |
| இரண்டாம் தளம் (Type-A+B) | 2371.52சமீ |
| கடை 1 தரைத்தளம் | 31.96சமீ |
| கடை 2 தரைத்தளம் | 31.96சமீ |
| GYM தரைத்தளம் | 69.21சமீ |
| அங்கன்வாடி தரைத்தளம் | 46.42சமீ |
| Librarary | 152.29சமீ |

EXECUTIVE ENGINEER
SLUM CLEARANCE BOARD
TRICHY DIVISION

பரப்பளவு கொண்ட உத்தேச குடியிருப்பு உபயோக கட்டுமானத்திற்கு பார்வை 5-ல் கண்ட அதிகார பகிர்மானத்திற்கு உட்பட்டு கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் மனை ஒப்புதல் மற்றும் கட்டிட அனுமதி வழங்க இசைவு அளிக்கப்படுகிறது. ஒப்புதல் அளிக்கப்பட்ட கட்டிட வரைபடத்திற்கு **க.வ./உ.செ.(பு.கூ.உ.தி.கு.)எண்:05/2019** என எண்ணிட்டு அனுப்பப்படுகிறது.

**சிறப்பு நிபந்தனைகள்:**

1. It is responsibility of the builders to ensure safe bearing capacity of the soil and adequacy of the foundation.

2. Planning permission is issued in accordance with the provisions of the Town and Country Planning Act and the rules made there under and does not cover the structural stability aspects including the safety during the construction which are covered under the Building Rules under the Local bodies Act. Planning permissions is issued subject to the condition that the applicant/developer and also the architects/Licensed Surveyors' and the structural Engineer associated with the development shall ensure that developments shall be structurally sound and adequate safety measures are taken during the process of construction.

3. "நகர் ஊரமைப்புத்துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதன்மூலம் விண்ணப்பத்தாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில் நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம் பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பத்தாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன்மூலம் முதற்கட்டமாக விண்ணப்பத்தாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக் கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல"

4. கட்டுமானங்கள் நடைபெறும் இடத்தில், பொது மக்கள் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில் வளர்ச்சிக் கட்டுப்பாட்டு விதிகளின்படி, தளப்பரப்பு விகிதம் (FSI) திறவிடங்கள் (Setback), வாகன நிறுத்துமிடம் மற்றும் பல நிறுவப்பட்டிருக்க வேண்டும்.

5. கட்டிடம் கட்டும்போது அரசு அனுமதி பெற்ற வயரிங் காண்ட்ராக்டர் மூலமாக வயரிங் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

6. OSR (Park) என ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இடத்தினை திறவிடமாக (பூங்காவாக) மட்டுமே பயன்படுத்த வேண்டும். அதில் எவ்வித அபிவிருத்தியும் மேற்கொள்ளக்கூடாது.

**நிபந்தனைகள்:**

1) உத்தேச குடியிருப்பு உபயோக கட்டுமானத்திற்கு Solar System அமைக்கப்பட வேண்டும்.
2) வரைபடத்தில் உத்தேசிக்கப்பட்டவாறு வாகனம் நிறுத்துமிடம் அந்த பயனுக்காகவே பயன்படுத்தப்பட வேண்டும்.
3) மனையில் காட்டப்பட்டுள்ள திறவிடங்கள் அதன்படியே நிலை நிறுத்தப்பட வேண்டும்.
4) தற்போது ஒப்புதல் பெறப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டிடத்தில் எவ்வித மாற்றமும் செய்தல் கூடாது. மாற்றங்கள் ஏதேனும் செய்வதாக இருந்தால் இவ்வலுவலகத்தின் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.
5) மழைநீர் சேகரிப்பு வசதிகள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறும், அரசாணை எண்: 138 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்: 11.10.2002ன்படியும் கட்டிடத்தில் செயல்படுத்தப்பட வேண்டும்.
6) உத்தேச கட்டிடத்தில் இருந்து வெளியேறும் கழிவுநீர் தனியார் வாகனங்கள் மூலம் வெளியேற்றவும். உபயோகிப்போருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகள் மற்றும் இதர தேவைக்கான நீர் வசதிகள் ஆகியவை மனுதாரர் தனது சொந்த செலவில் செய்து தர வேண்டும்.
7) மனையில் அமையும் குடிநீர் மேல்நிலைத் தொட்டி மற்றும் கிணறு ஆகியவற்றுக்கு கொசுதடுப்பு சாதனம் பொருத்தப்பட வேண்டும்.

S. [signature]

**EXECUTIVE ENGINEER**
SLUM CLEARANCE BOARD
TRICHY DIVISION.

49

8) உத்தேச கட்டுமானத்தில் விதிப்படித் தேவையான அளவுக்கு தீ தடுப்பு மற்றும் தீயணைப்பு சாதனங்கள் அமைக்கப்பட வேண்டும்.
9) அரசாணை எண்: 341/நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.1) துறை நாள்: 3.11.04-ன் படி செப்டிக் டேங்கில் "U" Trap அமைத்தல் வேண்டும்.
10) சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அறிவிக்கையின்படி உத்தேச கட்டிடத்திற்கு FLY ASH BRICKS மற்றும் Materials பயன்படுத்தப்பட வேண்டும்.
11) அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் நகல் (உண்மைநகல்) கட்டுமானங்கள் நடைபெறும்போது உத்தேச நிலத்தில் பிரசுரிக்கப்பட வேண்டும்.
12) உத்தேச கட்டிடத்தின் கழிவுநீர் வெளியேற்றுதல் தொடர்பாக/ STP Design-ற்கு தமிழ்நாடு மாசுகட்டுப்பாட்டு வாரியசட்டம் 1974 பிரிவு 25 (Water Act)ன் படிமேற்படி வாரிய இணக்கம் (Consent) பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

மனுதாரர் நன்னிலைவரி கட்டணம் **ரூ.ரூ.22,300/– (ரூபாய் இருபத்தி இரண்டாயிரத்து முன்னூறு மட்டும்)/–** Scrutiny Fee **ரூ.37,500/– (ரூபாய் முப்பத்திஏழாயிரத்து ஐநூறு மட்டும்)** வளர்ச்சிக்கட்டணம் **ரூ.52,500/- (ரூபாய் ஐம்பத்திரண்டாயிரத்து ஐநூறு மட்டும்)** கூராய்வுக்கட்டணம் **ரூ.100/- (ரூபாய் நூறு மட்டும்)** மாநில பாரத வங்கியில் செலுத்தி செலுத்துச்சீட்டின் அசல் மற்றும் நகல் இவ்வலுவலகத்தில் சமர்ப்பித்துள்ளார்.

ஒப்புதலளிக்கப்பட்ட வரைபடங்கள் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

**வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ), புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், புதுக்கோட்டை மாவட்டம்** அவர்கள் மேற்கொண்டு உத்தரவினை விண்ணப்பதாரருக்கு வழங்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

மனுதாரர் மேற்கொண்டு **வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ), புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், புதுக்கோட்டை மாவட்டம்** அவர்களை அணுகுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

ஒப்புதலளிக்கப்பட்ட உத்தரவு நகல் மற்றும் வரைபடங்கள் பெற்றுக் கொண்டமைக்கு ஒப்புகைச்சான்று அனுப்புமாறு **வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ), புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், புதுக்கோட்டை மாவட்டம்** அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

29/11/19

உறுப்பினர் செயலர்,
புதுக்கோட்டை கூட்டு உள்ளூர் திட்டக் குழுமம்/
நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்
சிவகங்கை மண்டலம், சிவகங்கை.

29/11/19

**இணைப்பு:**
உத்தரவு மற்றும் இருதொகுப்பு வரைபடங்கள் மற்றும் படிவம்.

**பெறுநர்:**
வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ),
புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம்,
புதுக்கோட்டை மாவட்டம்.

**நகல்:**
1. செயற்பொறியாளர்,
தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம்,
திருச்சிராப்பள்ளி பிரிவு,
மதுரை ரோடு,
பாலக்கரை,
திருச்சி - 8.

2. தொழில்நுட்ப வைப்பறை - ஒரு தொகுப்பு வரைபடத்துடன்.

EXECUTIVE ENGINEER
SLUM CLEARANCE BOARD,
TRICHY DIVISION.

**9ஏ-நத்தம்பண்ணை கிராம ஊராட்சி தலைவர் அவர்களின் செயல்முறைகள்**

**முன்னிலை : திரு.க.பாபு**

ந.க:402/2020 நாள் : .06.2020

**பொருள் :** கட்டிட வரைப்பட ஒப்புதல்-புதுக்கோட்டை மாவட்டம் 9ஏநத்தம்பண்ணை ஊராட்சிக்கு உட்பட்ட **பாலன் நகர்** பகுதியில் **நில அளவை எண்:95/6pt 15003.61 சதுர மீட்டர் பரப்பளவு உள்ள இடத்தில் Type (A+B) தரைத்தளம் 2734.27 ச.மீ Type (A+B) முதல்தளம் 2371.52 ச.மீ Type (A+B) இரண்டாம் தளம் 2371.52 ச.மீ மொத்தம் 7477.31 சதுர மீட்டரில்** 192 அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டுவதற்கு கட்டிட வரைப்பட அனுமதி வழங்கிட உத்தரவிடல்.

**பார்வை :**

1. செயற்பொறியாளர் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் அவர்கள் கடிதம் நக எண்: 887/JE/P/2017 நாள்: 19.07.2019.

2. புதுக்கோட்டை (01) மண்டல துணை வட்டாட்சியர் அவர்களின் செயல்முறைகள் கடிதம் டி.ஆர்.218/0103/22/0485TR நாள்:05.07.2018.

3. புதுக்கோட்டை உள்ளூர் திட்டக்குழுமம் தீர்மான எண் : 2 நாள்: 28.08.2019.

4. DTCP அலுவலகக் கடிதம் நாள்: 15.11.2019.

5. நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்:26294/2010 நாள்: 20.12.2010.

6. நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்:23152/2011 நாள் : 11.11.2011.

7. அரசானை நிலை எண்: 86 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள்: 28.03.2012

8. நன்னிலை வரி கட்டணம் மனுதாரர் செலுத்தி இவ்வலுவகத்தில் சமர்ப்பித்த நாள்: 28.11.2019.

9. நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்:2690/2019 நாள் :29.11.2019.

EXECUTIVE ENGINEER
SLUM CLEARANCE BOARD
TRICHY DIVISION.

உத்தரவு:

புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம் 9ஏ நத்தம்பண்ணை கிராம ஊராட்சி பாலன்நகர் நில அளவை எண்:95/6pt மனை எண்: 1 - 192-ல் நிர்வாக பொறியாளர் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் பார்வை (1)ல் காணும் விண்ணப்பதாரர் அடுக்குமாடி வீடு கட்ட கட்டிட வரைபட அனுமதி கோரி விண்ணப்பித்துள்ளார்.

எனவே விண்ணப்பதாரர் நிர்வாக பொறியாளர் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் என்பவர் 9ஏ நத்தம்பண்ணை கிராம ஊராட்சி பாலன்நகர் நில அளவை எண்:95/6pt மனை எண்:1 - 192-ல் **Type (A+B) தரைத்தளம் 2734.27 ச.மீ Type (A+B)** முதல்தளம் 2371.52 ச.மீ **Type (A+B)** இரண்டாம் தளம் 2371.52 ச.மீ மொத்தம் 7477.31 சதுர மீட்டரில் அடுக்குமாடி குடியிருப்பு கட்டுவதற்கு.

மேலும் இவ்வூராட்சிக்கு கட்டப்படும் கட்டிடத்திற்கு உரிய ஊராட்சிக்கு செலுத்த வேண்டிய கட்டணம் ரூ.794631/- (ரூபாய் ஏழு லட்சத்தி தொன்னூற்று நான்காயிரத்து அறநூற்று முப்பத்து ஒன்று மட்டும்) பல்வகை வரி இரசீது தனியரால் செலுத்தப்பட்டுள்ளது. (**இரசீது எண்:1611 நாள்:20.03.2020**).

| | |
|---|---|
| தரைத்தளம் (Type A+B) | - 2734.27 ச.மீ x ரூ.100 = ரூ.273427. |
| முதல்தளம் (Type A+B) | - 2371.52 ச.மீ x ரூ.100 = ரூ.237152. |
| இரண்டாம் தளம் (Type A+B) | - 2371.52 ச.மீ x ரூ.100 = ரூ.237152. |
| **மொத்தம் தொகை** | - **ரூ.747731.** |

| | | |
|---|---|---|
| அனுமதி கட்டணம் | - | ரூ. 747731.00 |
| ஆய்வுக் கட்டணம் | - | ரூ. 5000.00 |
| பிரதிகள் கட்டணம் | - | ரூ. 1500.00 |
| கழிவறை கட்டணம் (192 x 200) | - | ரூ. 38400.00 |
| போர்வெல் கட்டணம் (2 x 1000) | - | ரூ. 2000.00 |
| **மொத்தம் தொகை** | - | **ரூ. 794631.00** |

(ரூபாய் ஏழு லட்சத்தி தொண்ணூற்று நான்காயிரத்தி அறநூற்றி முப்பத்தி ஒன்று மட்டும்).

**EXECUTIVE ENGINEER**
SLUM CLEARANCE BOARD
TRICHY DIVISION

53

நிபந்தனைகள்:

1) வரைபடத்தில் அங்கீகரிக்கப்பட்ட அளவுக்குள் கட்டிடம் கட்டப்பட வேண்டும். கூடுதலாக கட்டிடம் கட்டக்கூடாது.
2) உரிய சர்வே எண்ணில் மட்டும் வீடு கட்டப்பட வேண்டும்.
3) வரைபடத்தில் உள்ளதில் மாற்றம் ஏதும் செய்தால் கட்டிடத்தின் உரிய திருத்த வரைபட ஒப்புதலை தனி அலுவலர் **9ஏ-நத்தம்பண்ணை** கிராம ஊராட்சி அவர்களிடமிருந்து பெற்ற பின்னரே பணி செய்யப்பட வேண்டும்.
4) கட்டிடம் கட்டுவதற்கு வரைபட அனுமதி **12.06.2020 முதல் 11.06.2021 வரை ஓராண்டு காலம்** அமுலில் இருக்கும்.
5) கட்டிடம் கட்டி முடித்த பின் திருந்திய வரைபடம் இவ்வலுவகத்திற்கு திருப்பி அனுப்பி வைக்கப்பட வேண்டும்.
6) கட்டிடத்தின் முன்பக்கம் 8 அடியம் காலி இடம் இருக்க வேண்டும். இருப்பககங்களிலும் தலா 5 அடி இடம் விட்டு கட்டப்பட வேண்டும்.
7) கட்டிடம் கட்டி முடித்தபின் தாங்களே கண்டிப்பாக கட்டிடத்தின் முன் கழிவு நீர் வாய்க்கால் கட்டிக்கொள்ள வேண்டும்.
8) கட்டிடம் கட்டி முடித்தவுடன் கட்டாயம் மழைநீர் சேகரிப்பு தொட்டி அமைக்க வேண்டும்.
9) கட்டிடம் கட்டுபவர்கள் மழைநீரை சேமிக்கன்ற வகையில் கட்டிடத்தில் மழைநீர் சேகரிப்பு அமைப்பு ஏற்படுத்திட வேண்டும். இவ்வமைப்பு வரைபடத்தில் காண்பிக்கப்பட வேண்டும்.
10) கட்டிடம் கட்டி முடித்து குடியேறிய பின்னர் குடியிருப்போர் பயன்படுத்தும் கழிவுநீர் வீட்டிற்கு வெளியிலே, சாலைகளிலோ விடக்கூடாது. இந்நீரை வீட்டிற்குள்ளேயே உள்ள காலி இடத்தில் (அமைக்கப்படும் தோட்டம் /வசதிக்குள்) பயன்படுத்துமாறு அமைப்பு ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.
11) வரைபடத்தில் உள்ள கட்டிடத்தின்பட கட்டிடம் கட்டிய பிறகு இம்மனைக்கு செல்ல உரிய சாலை வசதி தங்களின் முழுப்பொறுப்பிலே செய்து கொள்ள வேண்டும். ஊராட்சியில் பொது இடங்களில் இருந்து வழங்கிட உரிமை கோர இயலாது என்பது மனுதாரருக்குத் தெரிவிக்கப்படுகிறது.
12) **நில அளவை எண்:95/6pt** -ல் உரிய வரைபடத்தில் உள்ள சாலை மற்றும் ஊராட்சிக்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் (வரத்துவாரி) ஆக்கிரமிப்பு செய்து கடடிடம் கட்டினாலோ, இச்சொத்தின் மீது நீதிமன்ற வழக்குகள் ஏதும் இருப்பது தெரிய வந்தாலோ, மேற்கண்ட நிபந்தனைகள் மீறும்பட்சத்திலோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறுதலாகக் கட்டிடம் கட்டினாலோ வழங்கப்பட்ட அனுமதி இரத்து செய்யப்படும்.

K. B... 12/06/2020

தலைவர்

இணைப்பு: வரைபட நகல்கள்

9ஏ நத்தம்பண்ணை ஊராட்சி

பெறுநர்:
நிர்வாக பொறியாளர் ,
தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் ,
திருச்சிராப்பள்ளி கோட்டம் ,
மதுரை ரோடு பாலக்கரை,
திருச்சிராப்பள்ளி.

EXECUTIVE ENGINEER
SLUM CLEARANCE BOARD
TRICHY DIVISION.